AKHBAR : KOSMO

TARIKH : 21 NOVEMBER 2013

MUKA SURAT : 4

2.04 juta mohon untuk mengisi jawatan dalam sektor awam

# Kerja kerajaan jadi pilihan



KANGAR – Tahap keyakinan rakyat terhadap jawatan dalam sektor awam semakin meningkat berdasarkan jumlah permohonan kerja dengan Suruhanjaya Perkhidmatan Awam (SPA) meningkat mendadak kebelakangan ini, kata Pengerusi SPA, Tan Sri Mahmood Adam (**gambar**).

Beliau berkata, sehingga Oktober lalu, kira-kira 2.04 juta permohonan pekerjaan telah diterima oleh SPA berbanding lebih sejuta pada tahun lalu, peningkatan tertinggi dalam sejarah SPA.

"Selain permohonan baharu, ada juga permohonan dalam kalangan kakitangan awam untuk menjawat jawatan yang lebih tinggi," katanya kepada pemberita selepas menghadiri sesi interaksi SPA bersama ketua-ketua jabatan Persekutuan, badan berkanun, persatuan dan badan bukan kerajaan peringkat negeri di sini semalam.

Mengenai kakitangan awam menjalankan perniagaan sambilan bagi menambahkan sumber pendapatan, Mahmood berkata, mereka boleh berbuat demikian dengan syarat perlu mendapatkan kebenaran daripada ketua jabatan masing-masing.

Beliau berkata, ketua jabatan pula perlu memastikan bidang perniagaan yang dilakukan kakitangan mereka tidak bercanggah dengan peraturan jabatan.

Katanya, beliau tidak mempunyai rekod mengenai jumlah kakitangan awam yang menjalankan perniagaan sambilan kerana hanya ketua jabatan yang mempunyai rekod mengenai kakitangan mereka yang berniaga.

Sempena sesi interaksi itu, karnival kerjaya SPA diadakan dari pukul 9 pagi hingga 4 petang yang disertai 22 buah jabatan dan agensi kerajaan yang membabitkan pendaftaran permohonan pekerjaan secara online, taklimat kerjaya serta panduan menghadiri temu duga.

Menurut siaran media SPA yang dikeluarkan sempena sesi karnival kerjaya itu, sejak Januari sehingga Oktober tahun ini, SPA telah melantik 48,345 orang kakitangan perkhidmatan awam Persekutuan yang terdiri daripada 31,551 lantikan tetap dan 16,794 lantikan kontrak.

AKHBAR : MALAYSIA NANBAN

TARIKH : 22.11.2013

M/S : 6

# வேலை கோரும் விண்ணப்பம் அதிகரிப்பு பிஎஸ்டி மீதான நம்பிக்கையை நிரூபிக்கிறது

கங்கார், நவ. 22-

பொதுச் சேவைகள் துறைக்கான (பிஎஸ்டி) வேலை கோரும் விண்ணப்பங்கள் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ள நிலை அத்துறை மீதான மக்களின் கூடுதல் நம்பிக்கையை நிரூபிக்கிறது என டான்ஸ்ரீ மஹ்மூட் அடாம் கடந்த புதனன்று கூறினார்.



இவ்வாண்டு அக்டோபர் நில வரப்படி பிஎஸ்டி சுமார் 20 இலட்சத்து 840 ஆயிரம் விண்ணப்பங்களை பெற்றுள்ளது. கடந்தாண்டில் அவ்வெண்ணிக்கை 10 இலட்சத்தைத் தாண்டியிருந்தது என்றார் மஹ்மூட்.

கடந்த புதனன்று கங்கார் பெர்லிஸில் கூட்டரசுத் துறைகளின் தலைவர்கள், சட்டப் பூர்வ அமைப்புகள், சங்கங்கள், அரசு சாரா அமைப்புகள் ஆகியவற்றின் தலைவர்களுடன் மஹ்மூட் பரஸ்பர ஒத்துழைப்புக் கூட்டத்தை நடத்தினார். அதன் பிறகு அவர் மேற் கண்டவாறு கூறியுள்ளார்.

அரசுப் பணியாளர்கள் தங்களின் வருமானத்தை அதிகரிக்க பகுதி நேர வர்த்தகங்களை மேற்கொள்வது குறித்து அவர் கருத்துரைத்தார். அத்தொடர்பில் கருத்து முரண்பாடு ஏதும் இல்லாத நிலையுடன் துறைத் தலைவர்களின் அனுமதியைப் பெற்றிருந்தால் அவர்கள் பகுதிவர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடலாம் என்றார்.

அந்த பரஸ்பர ஒத்துழைப்புக் கூட்டத்தையொட்டி பிஎஸ்டி இணையம் மூலமான வேலை விண்ணப்பங்கள், வேலை தொடர்பான விளக்கங்கள், நேர்முகப் பேட்டித்திறன்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய வேலைச் சந்தை ஒன்றை நடத்தியது.

அதில் 22 அரசுத் துறைகள், அரசுத்துறை நிறுவனங்கள் பங்கேற்றன. காலை 9 மணிமுதல் மாலை 4 மணி வரை நடந்த அந்த ஒரு நாள் நிகழ்ச்சியில் சுமார் 3,000 பேர் கலந்து கொண்டனர்.

இதனிடையே பிஎஸ்டி இவ்வாண்டு ஜனவரி முதல் அக்டோபர் வரை கூட்டரசுப் பணிகளுக்கு 48,345 பேரை நியமித்துள்ளது. அதில் 31,551 நிரந்தரப் பதவிகளும் 16,794 ஒப்பந்தப் பணியிடங்களும் அடங்கும்.

பெர்லிஸ் மாநிலத்தைப் பொறுத்தவரை ஜனவரி 1 முதல் அக்டோபர் 31 வரை 28,257 வேலை கோரும் விண்ணப்பங்கள் பதிவாகியுள்ளன. அது கடந்தாண்டில் 15,175 விண்ணப்பங்களுடன் ஒப்பிடும் போது ஏறக்குறைய இரு மடங்காகும். இவ்வாண்டின் அதே காலக்கட்டத்தில் வேலைகோரி பதிவு செய்த 3,605 பேர் நேர்காணலுக்கு அழைக்கப்பட்டனர். அவர்களில் 429 பேருக்கு வேலைகள் வழங்கப்பட்டுள்ளன என பிஎஸ்டி வெளியிட்ட செய்திக் குறிப்பு கூறுகிறது.

- பெர்னாமா

AKHBAR : TAMIL NESAN

TARIKH : 21.11.2013

M/S : 4

Tamil Nesan 21-11-2013 M/S 4

# பொதுச்சேவைத் துறையின் மீதான மக்களின் நம்பிக்கை அதிகரித்துள்ளது!

## - டான்ஸ்ரீ மாமுட் அடாம் தகவல்

**கங்கார், நவ. 21-** பொதுச்சேவைத்துறை தொடர்பாக பொது மக்கள் இடையே நம்பிக்கை அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

அண்மையில் இத்துறைக்கு விண்ணப்பம் செய்வோரின் எண்ணிக்கை திடீரென உயர்வு கண்டதைத் தொடர்ந்து பொதுச்சேவை மீதான மக்களின் நம்பிக்கை மேலோங்கியிருப்பதாக ஆணையத் தலைவர் டான்ஸ்ரீ மாமுட் அடாம் தெரிவித்தார்.

கடந்தாண்டில் பெறப்பட்ட 10 லட்சத்திற்கும் மேற்பட்ட விண்ணப்பங்களைக் காட்டிலும் இவ்வாண்டு அக்டோபர் மாதத்தில் 20 லட்சத்து 40 ஆயிரம் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

இந்த விண்ணப்பங்களில் புதிய வேலை விண்ணப்பங்களைத் தவிர்த்து பதவி உயர்விற்கான விண்ணப்பங்களும் அடங்கியுள்ளதாக மாநில அளவிலான கூட்டரசு இலாகா சட்ட அமைப்புகள், சங்கங்கள், அரசு சார்பற்ற இயக்கங்களின் தலைவர்களுடனான கலந்துரையாடலில் கலந்துகொண்ட பின்னர் மாமுட் அடாம் செய்தியாளர்களிடம் பேசினார்.

இதனிடையே, தங்களின் வருமானத்தைப் பெருக்குவதற்காகப் பகுதி நேர வணிகத்தில் ஈடுபட்டு வரும் பொதுச்சேவை ஊழியர்கள், முதலில் அத்துறைத் தலைவர்களிடம் அனுமதி பெற வேண்டும் என்று மாமுட் வலியுறுத்தினார்.

இவ்வாறு தங்களை வணிகத்தில் ஈடுபடுத்தும் ஊழியர்கள் துறையின் விதிமுறைகளை மீறாமல் இருப்பதை அதன் தலைவர்கள் உறுதி செய்ய வேண்டும்.

தற்போது பகுதி நேரமாக வணிகத்தில் ஈடுபட்டு வரும் பொதுச்சேவை ஊழியர்களின் விவரங்கள் தம்மிடம் இல்லை; மாறாக அதை அத்துறையின் தலைவர்கள் மட்டுமே வைத்திருப்பர் என்று அவர் மேலும் கூறினார்.

TAMIL NESAN DAN MALAYSIA NANBAN

21.11.2013 DAN 22.11.2013

M/S: 4 DAN 6

**KEPERCAYAAN TERHADAP SEKTOR AWAM SEMAKIN MENINGKAT**

Keyakinan terhadap jawatan awam semakin meningkat, kata Pengerusi Suruhanjaya Perkhidmatan Awam S.P.A Tan Sri Mahmood bin Adam semasa sesi Interaksi dan Karnival Kerjaya SPA di Kangar,Perlis. Beliau berkata permohonan daripada masyarakat awam semakin meningkat daripada 1.0 juta kepada 2.0 juta pada tahun ini. Daripada permohonan tersebut, ada juga permohonan baru daripada kakitangan awam yang sedang berkhidmat untuk menjawat jawatan tinggi. Beliau juga berkata, kakitangan awam yang menjalankan perniagaan sambilan perlu mendapatkan keizinan daripada Ketua Jabatan terlebih dahulu. Ketua Jabatan juga perlu prihatin terhadap kakitangan mereka yang membuat kerja sambilan supaya kerja tersebut tidak bercanggah dengan peraturan jabatan. Sebanyak 22 Jabatan Kerajaan telah mengambil bahagian dalam karnival kerjaya di Kangar, Perlis yang bermula pada pukul 9.00 pagi hingga 4.00 petang. Lebih daripada 3000 orang telah menyertai karnival tersebut dan juga membuat permohonan untuk jawatan awam. Seramai 28,257 calon telah membuat permohonan jawatan awam daripada negeri Perlis pada Januari hingga Oktober 2013 dan tahun sebelum pula hanya 15,175 permohonan sahaja. Pada tahun ini, 3,605 calon telahpun dipanggil temu duga dan 429 calon telah layak dipilih sebagai penjawat awam.